அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2024/2025

## தமிழ் - ஆண்டு 10

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

வட இந்தியாவில் சிந்துநதி பாயும் நிலப்பகுதி சிந்துவெளி என்று அழைக்கப்படுகிறது. அங்கே மொகஞ்சதாரோ என்னும் இடத்தில் ஆய்வுகள் மேற்கொண்டபோது பல உண்மைகளைத் தெரிந்துகொள்ள முடிந்தது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் அந்த இடம் மண்மேடாகிப் புதைந்து போயிற்று. அப்படிப் புதைந்து போன நகரத்தைத்தான் இப்போது தோண்டிப் பார்த்து ஆராய்ந்துள்ளார்கள். எம் முன்னோர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று ஆராய்ந்து பார்த்தபோது பழங்காலத்தில் தமிழர் எழுதிய எழுத்து எப்படிப்பட்டது என்று அறிய முடிந்தது. பழங்காலத்தில் தமிழர் சீனரைப் போலவே சித்திர எழுத்துகளை எழுதியுள்ளனர் என்பதும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது. புதைபொருள் ஆராய்ச்சியின் மூலமே இந்த உண்மைகள் தெரியவந்துள்ளன. அத்துடன் தமிழ்நாட்டிலுள்ள கீழடி என்ற இடத்தில் நடந்த அகழ்வாய்வின்போது கண்டெடுக்கப்பட்ட மண்பானை ஓடுகளிலும் சித்திர வடிவில் எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன. அந்தவகையில் தமிழர் சித்திர எழுத்துகளை எழுதிவந்த காலம் மிகமிகப் பழைய காலமாகும்.